19th September 1958]

Scavengers

* 339 *Q.*—Sri P. S. SANTHANAM : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை நகராண்மைக் கழகத்தில் வேலை செய்யும் நகரசுத்தித் தொழிலாளிகள் சுமார் 2½ மாதத்திற்கு முன் வேலைநிறுத்தம் செய்த விஷயம் சர்க்காருக்குத் தெரியுமா ?

(ஆ) அப்படி திடீரென்று வேலை நிறுத்தம் செய்ததற்குக் காரணம் என்ன ?

(இ) எத்தனை நாள் வேலை நிறுத்தம் நீடிக்கப்பட்டிருக்கிறது ?

(ஈ) இந்த வேலை நிறுத்தம் காரணமாக முனிசிபாலிடிக்குப் பிடித்த அதிக செலவு எவ்வளவு ?

(உ) வேலையிலிருந்து நீக்கப்பட்ட நகரசுத்தியாளர்களை மீண்டும் வேலைக்கு எத்துக்கொள்ள உத்தேசம் உண்டா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) & (*c*) Yes. They struck work from the afternoon of 27th December 1957 to 20th January 1958.

(*b*) Because their request for immediate payment of special remuneration for extra work done during the Karthigai Deepam festival was not complied with.

(*d*) No extra expenditure was incurred.

(*e*) It is not proposed to reinstate the 12 workers who were dismissed from service.

Sri P. U. SHANMUGAM : 12 நகரசுத்தித் தொழிலாளர்களை மட்டும் வேலையிலிருந்து நீக்கியதாக குறிப்பிட்டிருக்கிறது. அவர்களை மட்டும் நீக்குவதற்கான காரணங்கள் என்ன ? அவர்களை மீண்டும் சேர்த்துக்கொள்ள அரசாங்கம் உத்தரவு அனுப்புமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : அவர்களை மீண்டும் சேர்ப்பதற்கில்லை என்று ஏற்கனவே சொன்னேன். ஏன் அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால், அவர்கள் எந்த நிபந்தனைக்குட்பட்டு அந்த உத்தியோகத்திலே நியமிக்கப்பட்டார்களோ, அந்த நிபந்தனைகளை அவர்கள் மீறி வேலை நிறுத்தம் செய்ததற்காகத்தான்.

Mr. SPEAKER : இப்பொழுது 10·00 மணி ஆய்விட்டது. ஆனால், இன்னும் 15, 20 கேள்விகள் இருக்கின்றன. ஆகவே, இன்னும் பத்து நிமிஷம் அதிகமாக எடுத்துக்கொண்டு கேள்விகளையெல்லாம் முடித்து விடலாம். இதற்குச் சபை அனுமதியளிக்கும் என்று நம்புகிறேன்.

Forests in Kodaikanal hills

Mr. SPEAKER : As the hon. Member Srimathi T. N. Anandanayaki, is absent, the question and answer will be printed in the proceedings.

* 340 *Q.*—Srimathi T. N. ANANDANAYAKI : Will the Hon. the Minister for Home be pleased to state why dis-afforestation on a large-scale is taking place in the Kodaikanal Hills?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : There is no dis-afforestation going on in the Kodaikanal Hills. About 300 acres were ordered in 1949 to be assigned to political sufferers and 297 acres have been so disreserved and assigned.